# உடையார்கட்டில் இரு பகுதியினரும் நேரடி மோதல்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 11-1-86 சனி (மார்கழி 27 ரபியு ஆகிர் 29) முழக்கம் 337

## 4 மணிநேர துப்பாக்கிப் போர்

(கிளிநொச்சி)

நேற்று அதிகாலை கனரக வாகனங்களிலும், ஹெலிகப்டர்களிலும் உடையார்கட்டுப் பகுதியை முற்றுகையிட்ட ராணுவத்தினருக்கும், போராளிகள் குழுவுக்குமிடையே நீண்ட நேரம் நேரடித் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது. இச்சம்பவத்தில் ராணுவ தரப்பில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானதாகத் தெரியவந்துள்ளது. இருவர் காயமடைந்தனர். போராளிகளின் முகாமொன்று ராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இம்முகாமில் முப்பது பேர் இருந்ததாகவும், இவர்களில் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டதாகவும் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இம்முகாமிலிருந்த ஐந்து சுயமாக இயங்கும் துப்பாக்கிகள். றெக்கட் வெடிகள், வெடிமருந்துகள், அமெரிக்காவில் அச்சிடப்பட்ட புத்தகங்கள், இயக்கப் பிரசுரங்கள், இயக்க அடையாள அட்டைகள் ஆகியனவும் இம்முகாமில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருபகுதியினருக்குமிடையே சுமார் நான்கு மணி நேரமாக துப்பாக்கிப்போர் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

★ ★ யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிலிருந்து

# சிவத்தம்பியும், சிவபாலனும் தனித்தனியாக ராஜினாமா!

## வெவ்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி இருவரும் தமது கடிதங்களை கையளித்தனர்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இரண்டு தமிழ் உறுப்பினர்களான பேராசிரியர் கா. சிவத்தம்பியும், முன்னாள் அதிபர் கா. சிவபாலனும் தமது பதவிகளிலிருந்து ராஜினாமாச் செய்தனர். இவர்கள் இருவரும் தனித் தனியாக தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் செயலாளரான திரு பீலிக்ஸ் டயஸ் அபேசிங்காவிடம் இக் கடிதங்கள் நேற்று முன்தினமிரவு கையளிக்கபபட்டபோதிலும், இவை நேற்றுக் காலையே ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப் பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாதென்று திரு. அபேசிங்கா தெரிவித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பியும், திரு. கே. சிவபாலனும் தங்கள்

—6-ம் பக்கம் பார்க்க

## புளொட் பெரேரா தப்பினார்

உடுவரகே ஹென்றி பெரேரா என்ற 'புளொட்'

—6ஆம் பக்கம் பார்க்க

## நேற்றிரவு நாடு திரும்பிய தொண்டா 'ஈழமுரசு'க்கு தகவல்

## பண்டாரி மாத இறுதியில் கொழும்பு வருவார்!

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி இம்மாத இறுதியில் கொழும்பு வரவிருப்பதாக நேற்றிரவு நாடு திரும்பிய அமைச்சர் எஸ். தொண்டமான் 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினை, மலையகத் தமிழர் பிரஜாவுரிமை ஆகியவை பற்றி இவர் பேச்சு நடத்துவார் எனவும் அமைச்சர் சொன்னார்.

பாரதப் பிரதமர் ராஜீவுடன் தான் பேசியதிலிருந்து, வம்சாவழி மக்களை ஏற்பதற்கு

...6 ம் பக்கம் பார்க்க

## குழு அவசரம் அவசரமாக திங்கட்கிழமை கூடுகிறது!

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அவசர கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரண்டு தமிழ் உறுப்பினர்கள் குழுவிலிருந்து விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள நிலைமையைப் பரிசீலிக்கவே இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் இருபிரதிநிதிகளும் விலகியுள்ளதால், குழு கலைக்கப்பட

...6ம பக்கம் பார்க்க

## தொண்டமானாறில் திடீர் சூடு; ஒருவர் பலி; பலருக்குக் காயம்

(வல்வெட்டித்துறை)

தொண்டமானாறு இராணுவ முகாம் முன்பாக நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு வயோதிபர் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். காயமடைந்த கே. செல்வராஜ் (62) என்ற வயோதிபர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

செல்லச்சந்நிதி கோவிலிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த போது தொண்டமானாறு முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கள் இவரது காலைத் துளைத்துச் சென்றுள்ளன. இதனால் இவரது காலின் எலும்பு ஒன்றும் முறிவடைந்துள்ளது.

சம்பவம் நடைபெற்றவுடன் பொதுமக்கள் எல்லோரும் கோவில் பகுதியிலிருந்து ஓடிவிட்டதால் இரத்தம் பெருகிய நிலையில் காணப்பட்ட இவரை சிறிதுநேரத்தின் பின்னரே பொதுமக்கள் வான் ஒன்றில்

—6ஆம் பக்கம் பார்க்க

## திருவையாறு பகுதி ராணுவ ரோந்தில் வீடு தீக்கிரை!

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் மாலை திருவையாறு இரத்தினபுரம் பகுதிகளுக்கு கவசவாகனங்களில் ரோந்துசென்ற இராணுவத்தினர் அப்பகுதிகளில் தேடுதல் நடத்தியதோடு தீவிரவாதிகள் தங்கியிருந்ததாக சந்தேகத்தின் பேரில் ஒரு வீட்டை தீக்கிரையாக்கினர்.

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை உடையார்கட்டு சுதந்திரபுரம் பகுதிகளில் இரா

...6ம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி கொலைகள் பிரஜைகள் குழு புகார்

(கிளிநொச்சி)

கடந்த டிசெம்பர் மாதம் கிளிநொச்சிப் பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளையும், அதனால் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய விபரங்களையும் கிளிநொச்சிப் பிரஜைகள் குழு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

—6-ஆம் பக்கம் பார்க்க

### தியாகிகள் அஞ்சலிக் கூட்டத்தில் உரை:

## தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் தமிழர் வரலாற்றின் திருப்பு முனையாகும்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற படுகொலைகள் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது. அதற்கு முன்னரும் தமிழ் மக்கள் அடிபட்ட போதிலும் இச் சந்தர்ப்பத்தில்தான் தமிழர்கள் முதல் முறையாக தமது சொந்த மண்ணில் தாக்கப்பட்டார்கள்.

இவ்வாறு நல்லூர் இந்துவிடுதியில் நேற்றுமாலை நடைபெற்ற 1974 தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் திரு. என். இராஜேந்திரன் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கு. நேசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராஜேந்திரன் தொடர்ந்து பேசுகையில் இச் சம்பவத்திற்கு முன்பே தமிழர்களின் உரிமைகள் வன்முறை மூலம் பெறப்படலாம் எனக் கூறப்பட்டிருந்தபோதிலும் இச் சம்பவத்தின் பின்னரே இது கூர்மையடைந்துள்ளது என்றார்.

பேராசிரியர் கு. நேசையா

—6-ஆம் பக்கம் பார்க்க

## 10,000 கிலோ பேரீந்து குருநகர் கடலில் சங்கமம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணப் பாவனைக்காக கொழும்பிலிருந்து யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டதாகக்கூறப்படும் பத்தாயிரம் கிலோ எடையுள்ள பேரீச்சம் பழங்களும், கோர்லிக்ஸ், சீஸ் போன்ற விலையுயர்ந்த உணவுப் பண்டங்களும் பலரும் வியக்கத்தக்க முறையில் நேற்றுப் பகல் குருநகர் கடலில் வீசப்பட்டன.

களஞ்சியத்தில் இருந்த போதே இவை பழுதானது

—6-ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரி விளம்பரம்

### காணி விற்பனை

புங்குக்காட்டுச் சந்தி - தாளை யடி வீதி, 2ம் கட்டை மாசாரில் தென்னை, நெல், சிறு தானியம் பயிரிடுவதற்குகந்த நூறு (100) ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. நா. க. ஆறுமுகம், நாவலர் புத்தக சாலை, மந்திகை, புலோலி.

R/15294

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 126, கே. கே. எஸ். வீதி, "ராபி" அடைவு பிடிப்பவரிடம் 15-8-1981 தொடக்கம் 3-12-1984 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 1-2-1986 காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவுகடையில் வைத்து என்னால் விற்கப்படும். கே. இராஜகோபால் ஏல விற்பனையாளர். வண்ணார்பண்ணை.

R/15281

### இடமாற்றங்கள்

(மாங்குளம்)

மாங்குளம் ரயில்வே நிலைய தற்காலிக அதிபராகக் கடமையாற்றிய திரு. ரி. குணலிங்கம் யாழ்ப்பாணத்திற்கும், கொழும்புக்கோட்டை ரயில்வே நிலையத்தில் கடமையாற்றிய திரு. யேசுதாசன் மாங்குளம் ரயில்வே நிலைய அதிபராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## மின் ரூபத்தில் கூற்றுவன்

(உடுவில்)

மஸ்க்கன் கம்பனியில் காரச்சாரதியாகப் பணியாற்றிய மானிப்பாயைச் சேர்ந்த திரு. பூபாலசிங்கம் (55வயது) மின்சாரம் தாக்கி மரணமானார். இவர் தனது வீட்டிற்கு காரில் திரும்பிக் கொண்டிருந்த சமயம் தெருவில் அறுந்து கிடந்த மின் வயரை காரில் முட்டவிடாது அகற்றியபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் பாய்ந்ததினால் அவ்விடத்திலேயே பலியானார்.

## போத்தல் முறை போக்குமாறு கோரிக்கை

(வேலணை)

வேலணை, புங்குடுதீவு ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணெய் வகைகளை அளக்கும்போது மெற்றிக் அளவு முறைகளைப் பாவிக்காது பழைய முறைகளான போத்தல் அளவுகளைப் பாவித்து வருகின்றார்களாம்.

இது சம்பந்தமான புகாரொன்றை உணவுக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. கே. கே. மதிவதனனுக்கு மேற்படி பகுதி பாவனையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் அஞ்சல் அலுவலகத்தில் உப-அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். கிருஷ்ணசாமி யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றன. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: க. மகாலிங்கம், தலைவர்: தா. சதாசிவம் உப-தலைவர்: மா. பொன்னம்பலம், செயலாளர்: சி. தர்மகுலசிங்கம், உப-செயலாளர்: வீ. இரத்தினசிங்கம், பொருளாளர்: ச. பாஸ்கரலிங்கம், உப-பொருளாளர்: க. பட்டுலிங்கம், நூலகர்: வெ. சுப்பிரமணியம். பரிசோதகர்; மு. மகேந்திரன், விளையாட்டுப் பகுதித் தலைவர்: கு. சின்னத்துரை.

மூவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

(குருநகர்)

குருநகர், பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சமீபத்தில் குருநகர், சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ம. பீற்றர் நவிச்சந்திரா, உபதலைவர்கள்: திரு. அ. யேசுதாஸன், திரு. பெ. செல்லத்தம்பி, திரு. சி. தவரெட்ணம், ஆசிரியர்: க. சச்சிதானந்தசிவம், (சச்சி) செயலாளர், திரு. அ. பெனடிக்ற்ராதா, உபசெயலாளர்: திரு. அ. யோண் ஆசிரியர், பொருளாளர்: திரு. சு. இ. வென்ரக்கோன், விளையாட்டுத் தலைவர்; திரு. அ. ச. மனுவல், உபவிளையாட்டுத்தலைவர்: திரு. ஜீ எச். யோசேவ். ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.



## பிறந்தநாள் வாழ்த்து

❀ காரைநகர் வடக்கு, தெட்சணாமூர்த்தி கெங்காதேவி தம்பதியின் மகன் மோகனதாஸ் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ நாவற்குழி வடக்கு, குணசேகரம் நகுலேஸ்வரி தம்பதியின் மகள் டசிந்தா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❀ சண்டிலிப்பாய், செல்வரட்ணம் சத்தியவதி தம்பதியின் மகள் ஜனுஸா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ நீர்வேலி வடக்கு, பாலசுந்தரம் நீலாவதி தம்பதியின் மகள் மீரா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ நவாலி வடக்கு, விஜயரட்ணம் பேபிசரோஜா தம்பதியின் மகன் கௌசிகன் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ கோண்டாவில், சுப்பையா பொன்னம்மா தம்பதியின் மகன் விவேகானந்தன் இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ யாழ்ப்பாணம் ரயில்வே குவாட்டஸ், பாலேந்திரா பரமேஸ்வரி தம்பதியின் மகள் ஷர்மிளா இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## நோயாளர் இடர்தீர 'ஈழமுரசு' செய்தி உதவியது

(வேலணை)

பல மாதங்களாக மருந்துகள் இன்றி இயங்கி வந்த யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உப அலுவலகத்தால் நடாத்தப்படும் சித்த, ஆயுள் வேத மருத்துவ மனைக்கு இவ்வாரம் போதிய மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த வைத்தியசாலையில் மருந்துகள் பல மாதங்களாக இல்லாதிருப்பதாக 'ஈழமுரசு' செய்தி வெளியிட்டிருந்தது. இதன் பயனாகவே தற்போது தேவையான மருந்துகள் கிடைத்துள்ளன. இம் மருந்துகள் யாவும் நாவின்ன ஆயுள் வேத மருந்துக் கூட்டுத்தாபன தயாரிப்புக்களாகும். சித்த, ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை பெறுவோர் மருந்துகள் வந்துள்ளதனால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நிர்வாகிகள்

சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டி கிராம அபிவித்திச் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் டாக்டர் ந. கோபாலசிங்கம், உபதலைவர்கள்: சி. சிவபாதசுந்தரம், ஆர். பரமானந்தம், செயலாளர்: சு. தர்மசீலன், உப செயலாளர் ஜே. அந்தோனிப்பிள்ளை, பொருளாளர்: த. களாளசிங்கம், கணக்குப் பரிசோதகர்: நா. அமிர்தராஜா, போஷகர்கள்: நா. செல்வரத்தினம், க. மயில்வாகனம். பதினொருபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## இப்படியும் சோதனை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமை நோக்கி வந்த ஹெலிக்கப்டர் ஒன்று புளியங்குளம் என்ற இடத்தில் மண்வெட்டி போன்ற ஆயுதங்களுடன் வாய்க்கால் திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நீர்ப்பாசன திணைக்கள ஊழியர்களைக் கண்டதும் தாழப்பறந்து வட்டமிட்டது.

இதனால் அவ் ஊழியர்கள் பதட்டமடைந்தனர். எனினும் சிறிது நேரத்தில் ஹெலிக்கப்டர் தனது சந்தேகத்தைப் போக்கிக் கொண்டு தொடர்ந்து சென்று விட்டது.


## மின் தடை

### இலங்கை மின்சார சபையின்

### முக்கிய அறிவித்தல்

1986-01-12 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அவசர திருத்த வேலை காரணமாக காலை 8-00 மணி முதல் 8-30 மணிவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேச மின பொறியியலாளர்களின் சகல பகுதிகளிலும் மின் தடை ஏற்படும். அதனைத் தொடர்ந்து காலை 8-30 மணி முதல் மாலை 4-00 மணி வரை யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை ஆகிய மின் அத்தியட்சகர்களின் பிரிவுகளில் மாத்திரம் மின் தடை ஏற்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

இம் மின் தடையால் பாதிப்படைய இருக்கும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் அசெளகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

R/1002


## 95-ம் நாள் நினைவஞ்சலி

### செல்வன். கந்தசாமி ரகுக்குமார்



அன்னை மடியில்
24-4-1980

ஆண்டவன் அடியில்
9-10-1985

நீ நேசித்த இலட்சியங்கள் எமது அன்பின் ஊடாக சுமந்து செல்லப்படுகின்றன. உனது இழப்போ எங்கள் எல்லோருக்கும் பேரிழப்புத்தான். எங்களை எல்லாம் ஆறாத்துயரில் விட்டு நீரில் மூழ்கி மரணமானாயே.

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர், அன்ரி அம்மா, சித்தா,
சகோதரி, சகோதரர்கள்.

R/16305


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

தெல்லிப்பளையில்....

Computer
Programming
Course

ஆரம்பம்
13.1.86 பி. ப. 4.15
திங்கள்) பி.ப. 4.15
புதன்)

POLY INSTITUTES
TELLIPPALAI.

R/16307

A/L 88


அடிப்படை
பிரயோககணிதம்
6 மாத கால
சனி, ஞாயிறு வகுப்பு
ஆரம்பம்; 12.1.86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும்
பெருமாள் கோவிலுக்கும்
இடையில்)

A/L 88

தூயபிரயோக கணித
வகுப்பு
யூலை மாதம் ஆரம்பமாகும்
10-00 : பிரயோககணிதம்
11-30 : தூயகணிதம்

R/15276


## திரு. திருமதி
## மனோகரராசா செல்வராணி
தம்பதிகளின்
## 34-ம் 31-ம் நாள் நிறைவு நினைவு



| | மண்ணகம் | விண்ணகம் |
|---|---|---|
| மனோகரராசா: | 26.06.1948 | 11.12.1985 |
| செல்வராணி: | 01.04.1951 | 14.12.1985 |

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் 13.01.1986 திங்கள் காலை 6.30 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இவ்விரங்கற் பலியில் பங்கு பற்றுமாறும் அதை தொடர்ந்து இல்லத்திலும் நடைபெறும் வைபவங்களிலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணேசபுரம்,
கிளிநொச்சி,

இவர்களின் பிரிவால் துயருறும்
அன்பு மகள், பெற்றோர் சகோதரர்கள்.

R/16306

உ. அ. அதிபர் பேச்சு:

# உணவுப் பொருள் மூலமே நோய்கள் பரவுகின்றன

(வேலணை)

"உணவுப் பொருட்களின் மூலம் பல நோய்கள் பரவ ஏதுவாகின்றது. பாண், மற்றும் உணவுப் பொருட்களைத் தயாரிப்போர் சுகாதார விதி முறைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் பாண் பேக்கரி சொந்தக்காரர்கள் மா, பேக்கிங் பவுடர், மற்றும் அத்தியாவசிய பாண் தயாரிப்புக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்வதில் சிரமமடைகின்றார்கள் என அறிகின்றேன். பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பிரதேச பாவனையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இவற்றிற்கு தகுந்த பரிகாரம் காண்பேன்."

மேற்கண்டவாறு பிரதேச பாவனையாளர் சங்கத்தின் மாநாடு வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றபோது இச்சங்கத்தின் தலைவியும், வேலணை உதவி அரசாங்க அதிபருமாகிய செல்வி மைதிலி சோமசுந்தரம் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு ஆகியபகுதி பேக்கரிச் சொந்தக்காரர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு தங்களுக்கு பாண் தயாரிப்பில் ஏற்படும் பல பிரச்சினைகளை குறிப்பிட்டனர்.

இக்கூட்டத்தில் பாவனையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் பிரதேச பாவனையாளர் சங்க உறுப்பினர்களாகிய ஆசிரியர் எஸ். யே. பூராசா (புங்குடுதீவு), டாக்டர் கே. வி. கே. ஜெயச்சந்திரமூர்த்தி. திரு. பு. சுப்பிரமணியம், மற்றும் வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவுப்பகுதிகளின் கிராம சேவையாளர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைத்தலைவர்கள் மற்றும் அரச அலுவலகர்கள், விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் திரு. கே. கே. மதிவதனன், திரு. விக்டர் செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் அல்லைப்பிட்டி-வேலணை கிழக்கு பகுதி சுகாதார பரிசோதகர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பேசுகையில், பாவனையாளர் சங்கங்கள் மக்களின் அத்தியாவசிய தேவையாகிய உணவு விடயங்களில் அவசியமாக கவனம் செலுத்த வேண்டும். இச்சங்கங்கள் மக்களின் உன்னத நோக்கிற்காக செயல்பட வேண்டும். வியாபாரிகளிடம் போட்டி மனப்பான்மை இருக்க வேண்டும் ஆனால் இப்போட்டிகளால் மக்களை பாதிக்கக் கூடாது. வேலணை பிராந்தியத்தில் அமைந்துள்ள பாண் பேக்கரிகள் சுகாதார விதி முறைகளை கடைப்பிடிப்பது குறைவு. எனவே அவர்கள் நீதி, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்ள வேண்டும்.

தற்போது சகல உணவுப் பொருட்களிலும் கலப்படம் அதிகரித்துள்ளது. இவற்றால் பாவனையாளர்களுக்கு தீங்கு ஏற்பட இடமுண்டு. இவற்றிற்கு எதிராக பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வேலணை கிழக்கு பாவனையாளர் சங்க செயலாளர் திரு விக்டர் செல்வம் பேசுகையில், வேலணை கிழக்கை பொறுத்தவரையில் எமது சங்கம் பாவனையாளர்களுக்கு அதிக சேவை செய்துள்ளது. மேலும் பல சேவைகளை செய்ய உள்ளதாக குறிப்பிட்டார்.

பிரதேச பாவனையாளர் சங்க செயலாளர் திரு. எஸ் யே. பூராசா ஆசிரியர் பேசும் போது நாமெல்லோரும் பாவனையாளர்களின் நன்மைக்காகச் செயல்பட வந்துள்ளோம். சுரண்டல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் நாம் இனங்காண வேண்டும் என்று குறிப்பிட்டார். மற்றும் பலரும் உரையாற்றினர்.

# யாழ். மாவட்ட மாணவர் ஆங்கிலப்பயிற்சி நாட்கள்

(ஏழாலை)

யாழ். கல்வித்திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன

ஜனவரி பதினாறாந் திகதியிலிருந்து. மார்ச் எட்டாம் திகதிவரை பின்வரும் ஒழுங்கில் இப் பயிற்சி நடைபெறும்.

வட்டுக்கோட்டைத்தொகுதி பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரியில் ஜனவரி 16 முதல் 19 வரை. மானிப்பாய்த் தொகுதி– சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஜனவரி 22 முதல் 25 வரை, காங்கேசன்துறைத்தொகுதி- தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஜனவரி 27 முதல் 3" வரை. யாழ்ப்பாணத்தொகுதி- வேம்படி மகளிர் கல்லூரியில் பெப்ர 3 முதல் 6 வரை. நல்லூர் தொகுதி- யாழ். மகளிர் கல்லூரியில் பெப்ரவரி 10 முதல் 13 வரை. கோப்பாய்த்தொகுதி அச்சுவேலி சென்றிரேசா மகாவித்தியாலயத்தில் பெப்ரவரி 17 முதல் 20 வரை. சாவகச்சேரித் தொகுதி- றிபேக்கல்லூரியில் பெப்ரவரி 22 முதல் 25 வரை. பருத்தித்துறைத்தொகுதி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பெப்ரவரி 28 முதல் மார்ச் 3 வரை, உடுப்பிட்டித் தொகுதிநெல்லியடி மகாவித்தியாலயத்தில் மார்ச் 5 முதல் 8 வரை, தீவுப்பகுதிகள் வேலணை மகா வித்தியாலயத்தில் வகுப்புக்கள் நடைபெறும்.

## வித்தியாலயம் தரமுயர்வு

பருத்தித்துறை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த யாழ். மருதங்கேணி இந்து வித்தியாலயத்தில் இவ்வாண்டு முதல் ஏழாம் ஆண்டு வரை வகுப்புக்களை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோரின் சிபார்சில் இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி நூலகம் விஸ்தரிக்கப்பட்டு உப நூலகங்களும் திறக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மத்திய நூல் நிலையம் இந்த நிதியாண்டில் விஸ்தரிக்கப்படும். பாலர்களுக்கான நூல் நிலையத்தை உள்ளடக்கிய நூல் நிலையப் புனரமைப்பு வேலைகளுடன், இரு உப நூல் நிலையங்களும் அமைக்கப்படும். சாவகச்சேரி வடக்கிலும் நுணாவிலிலும் இந்த இரு உப நூல் நிலையங்களும் அமையும. இதற்காக மூன்று லட்சம் ரூபா செலவிடப்படும்.

இந்த நிதியாண்டில் சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலையத்தை, மேலும் விஸ்தரிப்புச் செய்து பாலர்களுக்கான நூல் நிலையத்தை அமைப்பதுடன் பொது மக்களின் நலனை முன்வைத்து,சாவகச்சேரி நகரிலிருந்து சுமார் ஒன்றரை மைலுக்கு அப்பாலும் இரு உப நூல் நிலையங்களையும் திறந்து வைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பொதுமக்களுக்கு பொது வளர்ச்சி அவசியம். விஞ்ஞானம், சுகாதாரம், நாட்டின் அபிவிருத்திபோன்ற பல்வேறு துறைகளிலும் நமது மக்கள் போதிய அறிவைப் பெறவேண்டும். நவீன விஞ்ஞான ரீதியிலானவிவசாயம் கைத்தொழில் அபிவிருத்திகள், மேல் நாடுகளின் முறைகள் இவற்றையெல்லாம் மக்கள் நன்கு உணர நூல் நிலையங்கள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. எனவே மேல்நாடு, கீழ்நாடு நூலாசிரியர்களின் நூல்கள், சஞ்சிகைகள் உட்பட பல தரப்பட்ட நூல்களும் நூல் நிலையங்களில் கிடைக்க வாய்ப்பளிக்கின்றன. ஆகவே மக்கள் நன்கு வாசித்து அறிவைப்பெற முடியும்என்று செயலாளர் திரு. நவரத்தினராஜா தெரிவித்தார்.

## மலேரியா பாதிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் பொதுமக்களைப் பீடித்திருந்த மலேரியாக் காய்ச்சல் தற்போது இங்குள்ள முகாமில் பணிபுரியும் பெருந் தொகையான சீருடையினரையும் தொற்றிக் கொண்டுள்ளதாம்.

இதனால் சில தினங்களாக இப்பகுதியில் சீருடையினர் ரோந்து சேவையை நடாத்துவதில்லை. இதனால் பொதுமக்கள் பீதியின்றி வீதிகளில் நடமாடுவதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

## பாதுகாப்புச் சபை உறுப்பினர்

(கல்வியங்காடு)

நல்லூர், முத்திரைச்சந்தை, முடமாவடி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளின் பாதுகாப்புக் கருதி சுற்றாடல் பாதுகாப்புச் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆடியபாதம் வீதி, பருத்தித்துறை வீதி, புதிய செம்மணி வீதி. கலைமகள் வீதி, இராணி வீதி, செம்மணி வீதி, அரச வீதி, சட்டநாதர் வீதி, இராமலிங்கம் வீதி ஆகிய இடங்களில் இப்பாதுகாப்புச்சபைபரீட்சார்த்தமாக செயற்படும். நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சீ. வீ. கே. சிவஞானம் (யாழ் மாநகர ஆணையாளர்), தலைவர்: திரு. க. சண்முகநாதன்,செயலாளர்: திரு. க. கேசவன் (சட்டத்தரணி), உப செயலாளர்: திரு. அ. வாமதேவன், பொருளாளர்: திரு. க. கனகரத்தினம், உறுப்பினர்கள்: திரு. து. செல்வராசா, திரு. த. ஜெயபாலசிங்கம், திரு. சி. இரகுநாதன், திரு. இ. சிதம்பரநாதன், திரு. எல். ஜீ. இராசரத்தினம், திரு. க. மயில்வாகனம், திரு. க பாலசுந்தரம், திரு. செ. சிவலிங்கம்.

மேலதிக விற்பனை: ஊழியர்க்கு

# உற்சாகக் கொடுப்பனவு வழங்குதல் அவசியமானது

(புலோலி)

"பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து மேலதிக விற்பனைகளை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உற்சாக கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்கள் சிறந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கூட்டுறவுச் சங்கங்களை இயங்கச் செல்வதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைகள் மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும்."

இவ்வாறு புலோலி ப.நோ. கூ. சங்க ஊழியர்களுக்கான "கூட்டுறவு அபிவிருத்தி" சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ். சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவியாளர் திரு. கே, சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

புலோலி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. சி. தணிகாசலம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. சண்முகலிங்கம், "கூட்டுறவுச் சங்கங்களைச் சிறப்பாக இயங்கச் செய்து மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு சங்க ஊழியர்களினதும், இயக்குநர்சபை உறுப்பினர்களினதும் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் மிக இன்றியமையாததாகும். இதனடிப்படையில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர்களுக்குச் சிறந்தசேவைகளை வழங்குவதையும் இலாபகரமாக இயங்கிவருவதையும் காணலாம்.

இயக்குநர் சபைத் தலைவர் திரு. சி. தணிகாசலம் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது;

இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எல்லா படிகளும் (அலவன்ஸ்) வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இறுதியாக வழங்கப்பட்ட படியை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதற்குக்காரணம் சங்கம் நட்டத்தில் இயங்குவதேயாகும். சங்கம் இலாபத்தில் இயங்கினால் அதனால் ஊழியர்கள் பல நன்மைகளைப்பெற்றுக் கொள்வார்கள் எனவே சங்கம் இலாபத்தில் இயங்க ஊழியர்கள் தம்மாலான வழிமுறைகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கவேண்டும்.

யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு.எம். கந்தையா சங்க பொது முகாமையாளர் திரு. எஸ். அருணகிரி, காரியாலய பரிசோதகர் திரு,பீ. கந்தையா ஆகியோரும் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

முறிகண்டி இந்து வித்தியாலயம்:

# மேலும்விருத்திசெய்வதற்கு துரிதமாக நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

முறிகண்டி இந்து வித்தியாலயத்தை மேலும் விருத்தி செய்து தரமுயர்த்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முறிகண்டிப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவின் உதவியோடு 1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி பகுதிகளைச் சேர்ந்த பல மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்று வருகின்றனர். மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி மு.சிவானந்தம், கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் ஆகியோர் எடுத்த நடவடிக்கையை அடுத்து இப்பாடசாலையை தரமுயர்த்தி விருத்தி செய்ய தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## சமாதான சபை

கரணவாய் தெற்கு சமாதான சபை அங்குரார்ப்பணம் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக தா. சதாசிவமும், இணைச் செயலாளர்களாக க. இரத்தினம், க. தர்மசிறி ஆகியோரும் தெரிவாகினர்.

A/L சித்தியடைந்த மாணவர்கள்
பொறியியலாளராவதற்கான வாய்ப்புக்களை அளிக்கும்

ENGINEERING வகுப்புகள்

E.C.E. (Lond) Parts I & II – May 87/86(Revision)
Institute of Quantity Surveying Part I
City & Guilds (London) — Quantity Surveying, Electrical / Telecommunication, Engineering

Draughtsmanship:-

ஆரம்ப திகதி: 19-1-1986

எமது நிறுவனம் 1986ஆம் ஆண்டு முதல் லண்டன் Engineering Council ஆல் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தனிச் சிறப்பையுடையது. பரீட்சைகளுக்குரிய பதிவுகள், Exemption ஆகியன எம்மால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன

விரிவுரைகள் யாவும் தகுதிவாய்ந்த Chartered Engineers கொண்ட குழுவினரால் சிறந்த முறையில் நடாத்தப்படுகின்றன.

முக்கிய குறிப்பு:
எமது நிறுவனத்தின் கிளை சென்னை நகரில் விரைவில் ஆரம்பாக விருக்கிறது.

ஏனைய விபரங்களுக்கு சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் பின்வரும் முகவரியில் V. S ராஜரத்தினம் (Chartered Engineer) அவர்களைச் சந்திக்கவும்.

JAFFNA ACADEMY OF SCIENCE–TECHNOLOGY
40, College Road, நீராவியடி,
யாழ்ப்பாணம்:
(யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து 75 யார்)
பி.994

உதய சிந்தனை

நமது நாட்டின் சூழ்நிலை முழுவதுமே பரஸ்பரச் சந்தேகத்தில் மூழ்கிக்கிடக்கிறது. சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சொல்லோ, செயலோ, இடையவே கிடையாது. ...மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

11-1-86 சனிக்கிழமை ( குரோதன ) மார்கழி-27

# உலகைப் பிளக்கும் ஜனநாயக காவலன்

உலக ஜனநாயகத்தின் பாதுகாவலன் தானே என்று பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்கா, இப்போது லிபியா மீது மேற்கொண்டுவரும் சர்வாதிகாரப் போக்கினுல், பூகோளம் இரண்டாகும் அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

இஸ்ரேல் ஒன்றுக்காகவே காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை எடுத்து வரும் "ஜனநாயகத் தந்தை" டொனல்ட் ரீகன், லிபியத் தலைவர் கடாபியைக் "காட்டுமிராண்டி" என்று வர்ணித்துள்ளார்.

லிபியாவுக்கு எதிரான மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து, அமெரிக்காவிலுள்ள சகல லிபிய நாட்டுச் சொத்துக்களையும் முடக்கி வைக்கவும் ரீகன் உத்தரவிட்டுள்ளார்.

லிபியா தனது பயங்கரவாதச் செயல்களை நிறுத்தாவிட்டால் மேலும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரித்துள்ள அமெரிக்க அதிபர் ரீகன், தனது நாட்டிலுள்ள சுமார் ஆயிரத்து ஐநூறு லிபியர்களையும் உடனடியாக நாட்டை விட்டுச் செல்லுமாறும் பணித்துள்ளார்.

இத்தனை சர்வாதிகார நடவடிக்கைகளை எடுத்தும்கூட ரீகனுக்கு ஆத்திரம் தீரவில்லை.

லிபியாமீது போர் தொடுக்க அமெரிக்கா ஆயத்தமாகி வருவதாகவும், அமெரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்து திடீர்த் தாக்குதலை நடத்தத் தயாராகி வருவதாகவும் அதிபர் கடாபி அறிவித்துள்ளார்.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுத் திட்டம் பற்றி லிபியா அச்சமடையவில்லை. எதனையும் எதிர்கொள்ளத் தயாரென்றும் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 27ம் திகதி வியன்னு, ரோம் ஆகிய நகரங்களிலுள்ள விமான நிலைய அலுவலங்களில் இடம்பெற்ற திடீர் தாக்குதலே இந்தப் பிரச்சினைக்குக் காரணம்.

இத்தாக்குதலை நடத்திய கெரில்லாக்களுக்கு லிபியா அடைக்கலம் கொடுத்ததாக அமெரிக்காவும், இஸ்ரேலும் குற்றஞ் சாட்டியுள்ளன.

இதனை லிபியா அடியோடு மறுத்துள்ள போதிலும், அமெரிக்காவும், இஸ்ரேலும் ஏற்கவில்லை. அதற்குப் பதிலாகவே, பொருளாதார தடையையும், தாக்குதல் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

இவ்விடயத்தில் அமெரிக்கா எதிர்பார்த்த "உலக ஒத்துழைப்பு" அதற்குக் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் 'நம்பர் வன்' எதிரியான சோவியத் ரஷ்யா இதனை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அமெரிக்காவின் நேசநாடுகள் கூட இதனைப் பலமாக எதிர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கனடா, நெதர்லாந்து நாடுகள் எதிர்ப்புக்குரல் கொடுத்த முதல் நாடுகள்.

மேற்கு ஜேர்மனி. இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளும் தமது எதிர்ப்பைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளன.

லிபியாமீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொள்ளுமானுல், மேற்கு ஜேர்மனி லிபியாவுக்கு உதவ வேண்டிவரும் என்று அந்நாட்டுத் தலைவர் அறிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தில் மத்திய கிழக்கு நாடுகளும் லிபியாவுக்காகக் குரல் கொடுக்கத்தவறவில்லை.

அமெரிக்காவின் சர்வாதிகார நடவடிக்கைகளையும், இஸ்ரேலின், பயங்கரவாதச் செயல்களையும் தடுப்பற்கு இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டுமென்று குரல் கொடுக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் பார்க்கும் போது, சர்வதேச பயங்கரவாதிகளான இஸ்ரேலியர்களின் தோழமையுடன், அமெரிக்கா கண்மூடித்தனமாக மேற்கொண்டிருக்கும் செயல்களினுல் அரபு நாடுகள் ஒன்றுபட்டிருப்பது மட்டுமன்றி, மேற்கு நாடுகளில் பிளவுமேற்பட்டுள்ளது.

அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும் ஜனநாயகம் என்ற போர்வையில் எடுத்து வரும் நடவடிக்கைகளை உலகம் இனம் கண்டு கொண்டுவிட்டது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

சின்னஞ்சிறு நாடுகளில்கூட தனது ஆதிக்கத்தைப் பதிப்பதற்கு எடுக்கும் கொள்கைகளை மாற்றவேண்டிய காலம் அமெரிக்காவுக்கு வந்து விட்டது.

# யாழ். உணவுச்சாலைகள் வியாதிகளை உருவாக்கும் நவீன தொழிற்சாலைகள்

**யாழ்ப்பாணத்திலுள்ள சில போசன சாலைகளைச் 'சுவை'த்துப் பார்த்த எமது நகர நிருபர் ஒருவர் பெற்ற அனுபவங்கள், தகவல்களின் தொகுப்பு இது.**

சுத்தம் சுகம் தரும் என்பது பழமொழி. ஆனுல் யாழ்ப்பாணத்தில் காட்சிப் பொருட்களாகக் காட்சிதரும் போசன சாலைகளும், சில தேநீர்க்கடைகளும் சுகமானவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும் களங்களாக இன்று மாறி வருகின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வாழ்க்கை யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்களைப் பொறுத்த மட்டில் வெறும் கனவாகப் போவதற்கு இங்குள்ள உணவு நிலையங்களுக்கும் பெரும் பங்குண்டு.

யாழ். நகரிலுள்ள போசன சாலைகளின் சுத்தமற்ற உணவு வகைகளையும் சுகாதார பராமரிப்பற்ற நிலையினையும் உணவு உட்கொள்ளுகின்ற, பார்க்கின்ற ஒவ்வொருவரும் அறியாமலில்லை. ஆனுல் இவைகளை யார் கவனிக்கவேண்டும் என்ற கேள்வியே இன்று எல்லாரிடமும் நிலைகுத்தி நிற்கின்றது

யாழ். மாநகராட்சி மன்றம் கவனிக்கவேண்டுமென்று, சிலர் சொல்கிறுர்கள். அனுமதியைப் பெருது மூலைக்கு மூலை சாக்கடைகளுக்கு அருகே நடாத்தப்படும் தேநீர்க் கடைகள் மாத்திரமே அசுத்தமாகவுள்ளன என்று, வேறு சிலர் கருதுகிறுர்கள். இவைகளை பண்பான இயக்கங்களே கவனிக்க முன்வர வேண்டும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இந்நிலையில் இற்றைவரைக்கும் சுகாதாரமற்ற நிலையில் நோயால் பீடிக்கப்பட்டு இறப்பவர்களின் தொகை (சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை) அதிகரித்துவருகின்றதென்றுல், சுத்தமற்ற நாற்றமுடன் காட்சியளிக்கின்ற தேநீர்க்கடைக்கும் இதில் பங்குண்டு என்பதை எவரும் மறக்கமுடியாது.

இன்று கடையில் சாப்பிடுவோம் என நினைத்து சென்று அங்குள்ள கதிரையிலேயோ, அல்லது வாங்கிலேயோ குந்தினுல் உடுபிடவைகள் நனைந்து போகின்றன. அது மட்டுமல்ல தண்ணீர் எங்கு தேங்கி நிற்கிறதோ அங்கே நுளம்புகளும் இருக்கின்றன. இந்நிலையில் அப்படியிருந்துவிட்டு உணவு உண்டபின் எழுந்து செல்லும் போதுதான் பக்கத்தில் வரும் நண்பர்கள் உமது வேட்டியில் இரத்தக் கறைகள் இருக்கின்றது என்று சொல்லுவார். இப்படி நண்பரின் வேட்டியை பார்த்தால் அவரது வேட்டியிலும் அப்படியேதான். பின்பு இருவரும் இரத்தக்கறைகள் பற்றி ஆராட்சி செய்தால் அது நுளம்புகளின் ஆட்சியென்று தெரிகிறது.

தேநீருக்கு 'ஆடர்' கொடுத்து விட்டு காத்திருந்தால் சுவையான தேநீர் வராது பதிலுக்கு வாய் உடைந்த 'கிளாசில்' களனித்தண்ணீர் போன்ற ஏதோ பானம் வரும். பணத்தைக் கொடுக்கின்றேம் களனித்தண்ணீரைப் போன்ற ஏதுக்குமல்ல, ருசியான தேநீருக்குத்தான் என்பதை உரிமையாளர்கள் உணர்வதில்லை.

கடைக்குக் கடைகள் தேநீா மட்டுமல்ல உணவுப் பண்டங்களுமே விலை வித்தியாசமாக விற்பனையாகின்றன. ஆனுல், தரம், அளவு, நிறை ஏன் சுவையும் கூட வித்தியாசம், வித்தியாசமாக இருக்கின்றன.

சாப்பிடுவதற்கு பீங்கான் அல்லது வாழை இலை கொடுப்பார்கள். பீங்கானில் அடுத்தவர் சாப்பிட்டுவிட்டுப்போன அடையாளங்கள் தெரியும். வாழை இலையில் செம்மண் தெரியும். முதலாளியிடம் கேட்டால் அவர் உபசரிப்பாளர்களைத் திட்டுதிட்டென்று திட்டுவார் அது அந்தளவோடு முடிந்து விடும் பின்னர் அவர்களைக் கூப்பிட்டு இப்படியெல்லாம் கொடுக்கக்கூடாது என்று கூறுவார்களா?

கொத்துரொட்டிக் கடைக்காரர்களையும் நாம் நினைவில் அமர்த்தினுல் இரண்டு கறள் பிடித்த தகடுகளால் கொத்து கொத்தென்று கொத்துவார்கள் சத்தம் வானத்தைப் பிளக்கும் அந்தளவுக்கு முதலாளிக்கும் கொத்துபவனுக்கும் அது பழக்கப்பட்டதால் அவர்களுக்கு இசையாக விருக்கலாம். ஆனுல் சட்டிக்கு மேலே பறந்து திரியும் வண்டுகளும், நுளம்புகளுமல்லா இவ் இசையை ரசிக்கின்றன. சில வண்டுகளும் நுளம்புகளும் இசையின் வெறியால் கொத்துரொட்டிக் குள்ளல்லவா விழுந்து கிடக்கின்றன. மீண்டும் ஒரு முறை கொத்தும் போது அவைகள் அரைத்த மாவாகின்றன.

சில தேநீர்க் கடைகளில் குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பவர்கள் மூடிய பாத்திரத்தில் கொண்டு வந்து வைப்பார்கள். திறந்து பார்க்காமல் அண்ணுந்து நாம் ஊற்றிவிடுகிறேம். தண்ணீர் உள்ள அந்தப் பாத்திரத்தை திறந்து பார்த்தால், அது கை கழுவுவதற்கு கூட லாயக்கில்லாதது என்பது தெரியவரும். சிலவேளை குடித்த தண்ணீர் குமட்டிக் கொண்டு வெளியே வரும்.

தோசைக்குச் சாம்பாறு என்றதும் கொண்டு வருவார்கள். தோசைக்கு ஊற்றுவதற்கு முதலே ஆட்களுக்கும் ஊற்றும் கடைகள் யாழ். நகரில் ஏராளம். சாம்பாற்றில் பூச்சி கிடக்கும். இது என்ன என்று கோபத்துடன் கேட்டால் 'விற்றமின்' என்று சொல்லி சிரித்து விடுவார்கள். உண்பவருக்கும் கோபம்வராது. அவர்களும் சேர்ந்து சிரித்து விட்டுச் செல்வார்கள்.

"சுவையான உணவு தரமுடியாவிட்டாலும் சுத்தமான உணவையாவது தாருங்கள்" என்று கேட்பவர்கள் அரிதிலும் அரிது. இந்நிலையில் யார் இப்படியான அசுத்தங்கள் நிறைந்த தேநீர்க் கடை உரிமையாளர்களிடம் சென்று தட்டிக் கேட்பார்கள்?

முன்பு யாழ். மாநகர சபையினுல் தேநீர்க் கடைகளுக்கு வழங்கப்பட்ட விருதுகள், சான்றிதழ்கள் கடைகளில் இன்னும் தொங்குகின்றன. இனிமேல் மாநகர சபை சுகாதாரமற்ற கடைகளுக்கும் அனுமதியின்றி திறக்கப்பட்ட கடைகளுக்கும் மூடு விழா எனும் விருதுகளை வழங்குமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றன.

நகருக்கு வரும் மக்களையே தமது மூலதனமாகக் கொண்டு இயங்கும் உணவுச்சாலைகள், அவர்களின் உயிருடன் விளையாட்டு நடத்துகின்றன என்பதை புரிய வைப்பது யார்?

உணவுச்சாலைகளின் பின்பகுதியைச் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் யாராவது ஒரு அதிகாரிக்காவது கிடைக்குமானுல், உரிய நடவடிக்கையை உடனடியாக எடுப்பார்கள் என்பது நிச்சயம்.

## சங்கடம்தரும் சந்தைக் கட்டடம்

(வேலணை)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபையின் வேலணை உப - அலுவலகத்தினுல் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட வங்களாவடி சந்தைக் கட்டடத்தின் மேல் மாடிக்கட்டடத்தின் வேலைகள் இதுவரை பூர்த்தியடையாத நிலையில் இருப்பதால் கட்டடத்தின் மேலுள்ள இரும்புக்கம்பிகள் யாவும் கறள் பிடித்து பழுதடையத் தொடங்கியுள்ளன.

மேலும் கீழ்மாடிக் கட்டடங்களும் வெடிப்புக்கள் ஏற்படக் கூடிய நிலையில் இருக்கின்றன. மாடிக் கட்டடத்தின் கீழ் பகுதிகள் மழைகாலங்களில் நீர்கசிவதனுல்கடைவைத்திருப்போர் அசௌகரியமடைகின்றர்.

எனவே இது விடையத்தில் வேலணை உப- அலுவலகம் உடனடி கவனம் செலுத்தவேண்டுமென பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றுர்கள்.

## விசர்நாய் தொல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் விசர் நாய்களின் தொல்லையோ தினம் தினம் அதிகரித்து வருகிறது, மட்டுவில் தெற்கில் ஒரு தாயும் சேயும் நாய்கடிக்கு இலக்காகியுள்ளனர். சாவகச்சேரி நகரப் பகுதியிலும் 12 வயது மாணவன் ஒருவன் நாய்கடிக்கு இலக்காகிமரணமடைந்துள்ளான்.

இப்பொழுது சாதாரணமான வளர்ப்பு நாய்களுக்கே விசர்த்தன்மை ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனுல் தினசரி ஆஸ்பத்திரிக்கு மருந்து கட்டவும், ஊசி போடவும் மக்கள் அலைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

# லிபிய எதிர் நடவடிக்கை: அமெரிக்கா வாபஸ் பெறுமாறு இஸ்லாமிய நாடுகள் வற்புறுத்து!

(மொரோக்கோ)

அமெரிக்கா லிபியா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை வாபஸ் பெறவேண்டுமென்று மொரோக்கோவில் நடைபெறும் இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டுள்ளது. அமெரிக்காவின் இந்நடவடிக்கை கண்டனத்துக்குரியது என்றும், மாநாட்டில் கலந்துகொண்ட பிரஸ்தாப அமைச்சர்கள் தெரிவித்தனர். அமெரிக்காவின் இந்நடவடிக்கை சர்வதேசரீதியில் பலதரப்பட்ட கருத்துக்களை உருவாக்கியுள்ளது.

லிபியாமீது மேற்கொள்ளப்படும் எந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கும் எதிரான விதத்தில் தான் செயற்படப்போவதாக சோவியத் யூனியன் அறிவித்துள்ளது. அமெரிக்காவின் பயங்கரவாத நடவடிக்கையைத் தான் ஆதரிக்கின்றபோதிலும் லிபியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடை விடயத்தில் தான் சேர்ந்துகொள்ளப்போவதில்லை என பிரிட்டன் தெரிவித்துள்ளது.

நேட்டோ நாடுகளில் அங்கம் வகிக்கும் துருக்கி லிபியாவுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள முடியாது என மறுப்புத் தெரிவித்துள்ளது. துருக்கியப் பிரதம மந்திரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அரபு நாடுகளின் ஐக்கியத்தை வற்புறுத்தியுள்ள லிபிய அதிபர் கேர்ணல் கடாபி மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனான நேசத்தை வளர்த்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.

திரிப்பொலியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ராஜதந்திரிகளுடன் அவர் சம்பாஷணை நடத்தினார்.

லிபியாவுக்கு எதிரான அமெரிக்காவின் முன்னைய முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன என்றார் அவர்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கான தமது ஆதரவை மீண்டும் உறுதிப் படுத்திய அவர் பயங்கரவாதத்திற்கு தாம் எப்போதும் எதிர் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

இது இவ்வாறு இருக்க, அமெரிக்காவின் லிபியஎதிர்ப்பு நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையின் ஓர் முக்கிய கட்டம் என்று இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. சாமீர் தெரிவித்துள்ளார்.

## பாரதமும் பாகிஸ்தானும் வர்த்தக உடன்படிக்கை

(இஸ்லாமாபாத்)

பாரதமும், பாகிஸ்தானும் தனியார் வர்த்தகத்தை ஏற்படுத்திக் கொள்ள இணக்கம் கண்டுள்ளன.

இதற்கான உடன்பாடு இஸ்லாமாபாத்தில் பாரத, பாகிஸ்தான் நிதியமைச்சர்களுக்கு இடையே நேற்று கையெழுத்தானது.

இருதரப்பு நல்லுறவு வலுப்பட இது நல்ல சகுனம் எனறு தெரிவிக்கப்படுகிறது.

## அமெ. ரஷ்யத் தலைவர் மாநாடு: ஆயத்தப் பணிகள் ஆரம்பம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனும், சோவியத் தலைவர் திரு கொர்பசெவ்வும் கலந்து கொள்ளும் அடுத்த உச்சிமாநாட்டிற்கு இப்பொழுதிருந்தே ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஶூல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வுச்சிமாநாட்டிற்கான திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

ஜூன் மாதத்தில் உச்சிமாநாட்டை நடத்த அமெரிக்கா விரும்பியுள்ளது.

ஆனால் செப்டெம்பர் மாதம் வரை அதைப் பின்போட வேண்டும் என்பது சோவியத்தின் கருத்தாகும்.

## ★ புதுமணத் தம்பதியர் ★
### சிந்தை குளிர சீனாவில் கலாசாலை

(பீக்கிங்)

உலகில் மக்களின் பலதரப்பட்ட தேவைகள் கருதி பலரகப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. தேகப்பயிற்சிக்கு, கராத்தேப்பயிற்சிக்கு என்று இப்படியெல்லாம் பலவுண்டு. ஆனால் இங்கே தெரிவிக்கப்படுவது முற்றிலும் புதிதானது. ஆம், சீனப் புதுமணத் தம்பதியர், மணவாழ்க்கை இன்பம் பற்றியோ கருத்தடை பற்றியோ மகப்பேற்றை எப்படி விரும்பியவாறு பெறுவது என்பது பற்றியோ முதலிரவு புதிரை விடுவிப்பது பற்றியோ, கருவில் சிசு எவ்வாறு உருவாகும் என்பது பற்றியோ தகவல் பெறுவதாயின் தற்போது அதற்கென ஷங்ஹாய் நகரில் புதுமணத்தம்பதியர் ஆலோசனைக் கலாசாலை (சீனமொழியில் 'ஸின் ஹுான்') ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சீன வரலாற்றில் இக்கலாசாலை அமைவது இதுவே முதல்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### லெபனன் முறைப்பாடு:
## ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்றுப் பரிசீலனை செய்தது

(நியூயோர்க்)

தெற்கு லெபனனில் இஸ்ரேலிய இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் செயல்கள் பற்றி லெபனன் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டை ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்றுப்பரிசீலனை செய்தது.

எனினும் இப்பிரச்சினை தொடர்பான உத்தியோகபூர்வ விவாதம் எதிர்வரும் திங்கட்கிழமையே நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜனாதிபதி மார்க்கோஸ் நேற்று பேட்டி
## பிலிப்பைன்ஸில் இராணுவச் சட்டமா? எதிரணி வேட்பாளரின் மருட்சியே

(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி அடுத்தமாதம் ஏழாம் திகதி நடைபெறுமென ஜனாதிபதி மார்க்கோஸ்அறிவித்துள்ளார்.

இராணுவச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளாரென்று எதிர்க்கட்சி வேட்பாளர் திருமதி அக்கினோ சமீபத்தில் அச்சம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு இராணுவச்சட்டம் கொண்டு வரப்படலாமென அவர் கூறியிருந்தார்.

செய்தியாளரிடம் நேற்று திரு. மார்க்கோஸ் பேசுகையில், "திருமதி அக்கினோவின் இக்கூற்று அவரது மருட்சியின் விளைவே அல்லாமல் வேறொன்றுமில்லை'' என்று தெரிவித்தார்.

### சென்னையில் விடுதலைப் புலிகள் அறிவிப்பு
## முல்லைத்தீவில் இரண்டாயிரம் தமிழர் ராணுவத்தால் கைது

(சென்னை)

இராணுவம் முல்லைத்தீவில் இரண்டாயிரம் தமிழர்களைக் கைது செய்து முகாம் ஒன்றுக்குக்கொண்டுசென்றுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

இவர்களது நிலை என்னவாயிற்று என்பது தெரியவில்லை என்றும் இச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

### அசோக்குமார் துவக்கிவைத்தார்
## ஆந்திராவில் 15வதுசர்வதேச திரைப்படவிழா ஆரம்பம்

(ஹைதராபாத்)

ஆந்திரத்தலைநகர் ஹைதராபாத்தில் பதினைந்தாவது சர்வதேசத் திரைப்பட விழா நேற்று ஆரம்பமானது.

இத்திரைப்பட விழாவை பழம்பெரும் ஹிந்தி நடிகர் திரு. அசோக்குமார் ஆரம்பித்து வைத்தார்;

பல சிறப்பு விருதுகள் பெற்ற திரைப்படங்களும் இவ்விழாவில் திரையிடப்படவுள்ளன.

## அமெ. ராணுவ நடவடிக்கை லிபிய அச்சம் நீங்கவில்லை

(திருப்பொலி)

அமெரிக்கா லிபியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற அச்சம் தனக்கு தொடர்ந்தும் இருப்பதாக லிபிய அதிபர் கேர்ணல் கடாபி கூறியுள்ளார்.

திருப்பொலியில் செய்தியாளரிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## பஞ்சாப்பில் மாணவர் சம்மேளன முயற்சி பிசுபிசுப்பு

(ஜலந்தர்)

பஞ்சாப்பில் நேற்று சீக்கிய மாணவர் சம்மேளனத்தால் மேற்கொள்ளப்பட்ட சாலைப் போக்கு வரத்துத்தடை முயற்சி வெற்றியளிக்கவில்லை என அறிவிக்கப்படுகிது.

இந் நடவடிக்கை மாமூல் வாழ்க்கையைப் பாதிக்கவில்லை என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### சீனாவில் விவசாயிகள்
## அசிரத்தையால் தானிய உற்பத்தி வீழ்ச்சி என தகவல்

(பீங்கிங்)

சீனாவில் விவசாயிகள் தானிய உற்பத்தியில் அசிரத்தை காட்டுவது குறித்து சீன அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

விவசாயக் காணிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவோர்மீது நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் தானிய உற்பத்தி தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

### அனுமதிப் பத்திர முறை நீக்குக
## பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் பங்களாதேஷ் கோரிக்கை

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள பங்களாதேஷ் பிரஜைகளை பார்ப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையை நீக்கி விடுமாறு பங்களாதேஷ் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நடைமுறையால் விளையும் இடர் குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

### ஈராக் அறிவிப்பு
## ஈரான் கடற்படை இலக்கு மீது மிகக் கடும் தாக்குதல்

(லண்டன்)

வளைகுடாப் போர் மீண்டும் உக்கிர கதியில் நிகழ்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஈரானியக் கடற்படை இலக்குகளைத் தனது போர்க்கப்பல்கள் தாக்கி நிர்மூலமாக்கியுள்ளதாக ஈராக் கூறிக்கொள்கிறது.

ஈரானிய எண்ணெய்க் கப்பல்கள் மீதான தாக்குதல்களில் ஈராக் கூடிய அக்கறை காட்டி வருகிறது.

# ஈழமுரசு

வடபிரதேச அலுவலகத்தின் முயற்சியால்


## யாழ். மாஜிஸ்டிரேட் நீதிமன்றை இடம்மாற்ற ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு நீதிமன்ற ஊழியர்கள் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த மகஜர் நேற்று மாஜிஸ்ரேட்டிடம் கையளிக்கப்பட்டது. இராணுவ முகாமுக்கு அண்மையில் நீதிமன்றம் இயங்குவதால், தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்றும், இதனால் நீதிமன்றத்தை நகரில் பாதுகாப்பான வேறொரு இடத்துக்கு மாற்றவேண்டுமென்று ஊழியர்கள் வலியுறுத்திக் கேட்டுள்ளனர். குருநகர் பகுதிக்கு நீதிமன்றம் மாறலாமெனக் கூறப்படுகின்றது.

# பலாலி இராணுவமுகாமுக்கு அருகில் வைத்து தினமும் 150 அடகுநகைகளை வழங்கத் திட்டம்

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு நகைகளை, மீட்பதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகளை, பலாலி இராணுவ முகாமிற்கு அருகில் வைத்து தினமும் நூறு முதல் நூற்றைம்பது வரையிலாக வழங்க வேண்டுமென மக்கள் வங்கியின் வட பிரதேச முகாமையாளர் திரு. எம். கனேசசுந்தரம் வங்கித் தலைமைப் பீடத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் வங்கியின் தலைமைப் பீடம் இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சே இதற்கான பாதுகாப்பை வழங்க மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த சில தினங்களாக கோட்டையில் வைத்து பணம் செலுத்தியவர்களது நகைகள் வழங்கப்பட்ட போதிலும், கொழும்பில் இருந்து மேலதிக நகைகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்படாததால் அதுவும் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகத்தின் முன்னால் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து, நகைகள் வழங்கல் வேலையைத் துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## இதுவரை 42 பேர் மரணம் மழை தொடர்ந்து பெய்யும்

நாட்டின் சில பகுதிகளில் பெய்துவரும் மழை தொடர்ந்தும் பெய்யும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. குறிப்பாக கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இதனால் பாதிப்பு ஏற்படும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பதுளையில் நேற்று இடம்பெற்ற மற்றொரு மணசரிவில் எட்டுப்பேர் மண்ணில் புதையுண்டு இறந்தனர். இதுவரை நாற்பத்திரண்டு பேர் மண்சரிவுகளில் மரணமாகியுள்ளனர்.

இந்த தொடர்மழையினால் மேலும் பலர் வீடுகளை இழந்துள்ளனர். மட்டக்களப்பு, பொலநறுவ, அம்பாறை, பதுளை பகுதிகளில் மீட்புவேலைகள் நடைபெறுவதுடன் இவர்களுக்கு தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இன்று தேர்தல்

(மணகும்பான்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கிடையிலான தேர்தல் இன்று 11-ம் திகதி சனிக்கிழமை நடைபெறுகின்றது.

இச் சங்கத்தில் 15 கிளைகள் இருக்கின்றன. இந்த 15 கிளைகளிலும் இரண்டு கிளைகளான ஊர்காவற்றுறை பட்டினக் கிளையான இலக்கம் 01 (ஒன்று) உம் 7-ம் கிளையான தம்பாட்டிக் கிளையிலுமே தேர்தல் நடைபெறுகின்றன. ஏனைய 13 கிளைகளிலும், புளியங்கூடலில் உள்ள கிளை இலக்கம் 09-ல் ஒருவர் மட்டுமே தனது நியமனத்தைத் தாக்கல் செய்திருந்தார்.

### குழு அவசரம்...

லாயனவும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே, இருவரதும் ராஜினாமாவை வாபஸ்பெறச் செய்யவும் இப்போது உயர்மட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

### புளொட் பெரேரா....

இயக்க உறுப்பினர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து நேற்று தப்பியோடிவிட்டதாக பொலிஸ் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

ராஜகிரியைச் சேர்ந்த இவர் விசாரணையின் பொருட்டு தடுப்புக்காவலில் இங்கு வைக்கப்பட்டிருந்தார். இவரைப் பற்றிய தகவல்களை கொடுப்பவருக்கு பத்தாயிரம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டா எம். ஜி. ஆர் 35 நிமிட பேச்சு

(சென்னை)

கிராமிய தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நேற்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை சந்தித்துப் பேசினார். இலங்கையிலுள்ள இந்திய தோட்டத் தொழிலாளர்களின் துன்பமான நிலமைகள் குறித்து அவர் முதலமைச்சருடன் பேசினார். சுமார் முப்பத்தைந்து நிமிடங்கள் இருவரும் பேசினார்கள் என்று அறிவிக்கப் பட்டுளளது.

### பண்டாரி...

விதித்த நிபந்தனையை அவர் மாற்றுவார் என்று கூறமுடியாதென்று சொன்ன அமைச்சர், நான்கு லட்சம் மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையை இலங்கை தீர்க்குமானால் அதற்கேற்ப பாரதம் தனது கொள்கையை மாற்றக்கூடும் என்று சொன்னார்.

அமைச்சர் தொண்டமான் இன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவார்.

### திருவையாறு....

ணுவம் தேடுதல் வேட்டை நடத்தியது. சுமார் மூன்று ஹெலிகப்டர்களிலும் வாகனங்களிலும் சென்ற இராணுவத்தினர் இப்பகுதிகளைச் சுற்றிவளைத்தனர்.

அச்சம்பவத்தின் போது இளைஞர்களும் எதிர்த்தாக்குதல் நடத்தியதாக தெரியவருகிறது. துப்பாக்கிச் சத்தங்களும் குண்டுச் சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணமிருந்தது. மாலைவரை நிகழ்ந்த இச்சம்பவத்தில் இரு தரப்பிலும் மரணங்கள், காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என கூறப்பட்டபோதிலும் சரியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

## 4 சிறுவருக்கு மூளைக் காச்சல்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் நான்கு சிறுவர்களுக்கு மூளைக் காய்ச்சல் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து கிடைத்த வைத்திய பரிசோதனை அறிக்கை இதனை ஊர்ஜிதம் செய்துள்ளது.

### தமிழாராய்ச்சி....

தலைமையுரை நிகழ்த்துகையில், 1974-ல் இடம்பெற்ற சம்பவங்கள் போன்ற துக்ககரமான நிகழ்வுகளால் நாம் ஒன்றுபட்டு துணிவுடன் செயற்பட வேண்டும். எமது விடுதலையை நாமே தான் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் எமது நாட்டை விட்டு வேலை தேடுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்வது கூடாது என்றார்.

ஜனாப் இமாம் உரையாற்றுகையில், 1974 ஆம் ஆண்டுச் சம்பவத்திற்கும் பின்னர் வருடாவருடம், ஒன்பது தமிழர்களும் மரணமான அதே இடத்திலேயே நினைவு தினத்தை நடந்தினோம். சென்ற வருடமும் மிகவும் சிரமத்துடன் இதனை நாம் நடத்தக்கூடியதாக இருந்தது. ஆனால் இந்த வருடம் அவ்விடத்தில் நினைவு தினத்தை நடத்த முடியாத நிலையிலேயே நாம் உள்ளோம்.

அங்குள்ள நினைவுச் சின்னங்களுக்கு மாலையாவது போடலாம் என சிலர் கேட்டார்கள். ஆனால் அதற்கு மாலையிட முயற்சித்தால் மேலும் நான்கு ஐந்து நினைவுச் சின்னங்களை அவ்விடத்தில் நிறுவ வேண்டி ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

திரு. பொன். மதிமுகராஜா உரையாற்றுகையில், தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுச் சம்பவத்தின் பின்னரே சிவகுமாரன் போன்ற வீர இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினார்கள் என்றார்.

மாநகரசபை ஆணையாளர் திரு.சீ.வி கே. சிவஞானம், ஜனாப் சாகுல் ஹமீத், தேசிய கூட்டுறவுப் பேரவையின் தலைவர் திரு சிவமகாராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

சமயத் தலைவர்களான நல்லை ஆதீனம். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் வணக்கத்திற்குரிய சகாயதாஸன், ஜனாப் அலிமீரான் முகைதீன் ஆகியோர் நினைவுக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினர்.

திரு. கனகசபாபதி நன்றியுரை நிகழ்த்தினார்.

## சில்லறைக்காசு, முத்திரை யாழ்நகரில் தட்டுப்பாடு

(கல்வியங்காடு)

சில்லறைக் காசுக்கும், தபால் தலைகளுக்கும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் அடிக்கடி பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிககப்படுகிறது.

25 சதம், 50 சதம், ஒரு ரூபா, இரண்டு ரூபா நாணயங்கள் புழக்கத்தில் குறைவாகக் காணப்படுவதால் வியாபார நிலையங்கள், சந்தைகள், மற்றும் இடங்களில் கொள்வனவு - விற்பனை செய்வதில் பல சங்கடங்கள் உருவாகின்றன. நோட்டுக்களை மாற்றி சில்லறை பெற்றுக் கொள்வது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. எங்கும் 'சில்லறை இல்லை' என்ற சொல்லையே கேட்கவேண்டி உள்ளது.

முத்திரைகளில் வெளிநாட்டு முததிரைகள் மட்டுமல்லாது உள்ளூர் முத்திரைகளும் பல உள்ளூர் தபால் நிலையங்களில் இல்லை எனக் கை விரிக்கப்படுகிறது. இதனால் உள்ளூர் தபால்களைக் கூட அனுப்ப முடியாத நிலையில் கஷ்டங்கள் உருவாகின்றன. விலை கூடக் கொடுத்து வாங்குவதற்கும் சில தனியார் கடைகளில் முத்திரைகள் இல்லாமல் தட்டுப் பாடாகவே உள்ளது.

முத்திரைகளைத் தேடியும், சில்லறைகளை வேண்டியும் திரியும்பலரைத் தினமும் பலஇடங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

## இளைஞர் விடுதலை

(கிளிநொச்சி)

சில தினங்களுக்கு முன் கனகபுரம் பகுதிக்கு காரில் சென்ற இராணுவத்தினரால் கைது செய்யபபட்டு கிளிநொச்சி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கிருஷ்ணபிள்ளை தயாபரன் என்ற இளைஞர் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் முயற்சியால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

### கிளிநொச்சி....

கடந்த மாதம் பரந்தனில் சுப்பிரமணியம் புஸ்பராசா என்ற இளைஞர் சுட்டுக்கொல்லபபட்டமை, கரடிபபோக்கில் பத்தொன்பது வயது இளைஞரொருவர் சுட்டுக்கொல்லப் பட்டமை, ஆறும் வாய்க்கால் கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து ஒஸ்டின் மனோகரராசா, கந்தையா இராசரட்ணம், தர்மலிங்கம் தயேந்திரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டமை, மற்றுமிருவர் காயமடைந்தமை, கனகபுரத்தில் ஒரு வீடு தீ வைக்கப்பட்டமை, வட்டக்கச்சியில் தொடர்ந்து நாலு நாட்கள் தேடுதல் நடத்தியபோது ஏற்பட்ட பிரச்சினைகள் என்பன இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு ஒவ்வொரு மாத முடிவிலும் அறிவிக்க முடிவு செய்துள்ளதாகவும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி சிறிஸ்கந்தராசா அவர்கள் தெரிவித்தார்.

### தொண்டமானாறில்....

தூக்கிச்சென்றனர்.

வீதியால் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றையும் துப்பாக்கி ரவைகள் துளைத்தன. முகாமுக்குப் பாண் கொண்டு சென்ற வான் மீதும் சுடப்பட்டதாம். இதனால் வானின் சாரதி காயமடைய நேர்ந்தது.

### 10,000 கிலோ....

என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்களுக்கு சகாய விலையில் இப்பொருட்களை விற்பனை செய்யாமலும், பண்டிகைக் காலங்களிலும், குறிப்பாக முஸ்லிம் நோன்புப் பெருநாளிலும் பேரீச்சம்பழம் யாழ்நகரில் தட்டுப்பாடாக இருந்த போதிலும் இந் நிறுவனம் அசிரத்தையாக இருந்ததை அங்கு கூடி நின்றவர்கள் பலர் சுட்டிக்காட்டினர்.

இவை களஞ்சியத்தில் சுமார் இரண்டு வருடங்கள் தேக்கி வைத்திருந்திருக்கலாம் என்றும், அதனாலேயே இவை பழுதடைந்திருக்கலாமெனகூறப்படுகின்றது.

### சிவத்தம்பியும்....

ராஜினாமாவுக்கு வெவ்வேறு காரணங்களைத் தெரிவித்துள்ளனராம். இவர்களது ராஜினாமா பற்றி உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த 4-ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஹெலிகப்டர் தாக்குதல்கள்பற்றியும், இச் சம்பவத்தின் பின்னர் குழுவில் அங்கம வகிப்பதில் எந்த அர்த்தமுமில்லையென்று பேராசிரியர் சிவத்தம்பி தமது ராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளதாகவும், திரு. சிவபாலன் தமது கடிதத்தில் தமக்குக் கிடைத்த சில பயமுறுத்தல்களைக் காரணமாகக் காட்டியுள்ளதாகவும் தெரிகின்றது.

இவர்களது ராஜினாமா பற்றி "ஆல் இன்டியா ரேடியோ" நேற்றிரவு தனது செய்தியில், கண்காணிப்புக் குழுவினால் வடக்குக் கிழக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும் கைது செய்யப்படுவதையும் தடுக்க முடியாமல் இருப்பதாகக் காரணம் காட்டி இருவரும் விலகியுள்ளதாகத் தெரிவித்தது.

## கண்ணீர் அஞ்சலி

அரியாலையைச் சேர்ந்த யாழ். ஆஸ்பத்திரி ஊழியரான ஜெகதீஸ்வரருக்கு 31வது நாள் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 11-01-86 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336